**கவனிக்க.-** *13.06.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி I : தொகுதி (III) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1868 - 2014 ජූනි මස 20 වැනි සිකුරාදා - 2014.06.20**

*1868 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூன் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | 946 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 947 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 951 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூன் மாதம் 27 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

இலங்கை நில அளவைத் திணைக்களம்

**விலைமனுக் கோரல்**

*பிரதேச நில அளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை வாடகைக்கு பெற்றுக்கொள்ளல் - 2014*

*கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பிரதேச நிலஅளவை அலுவலகங்களுக்கு கட்டிடங்களை இரண்டு வருட காலத்திற்கு வாடகைக்குப் பெற்றுக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மாகாண நில அளவையாளர் நாயகங்களின் அலுவலகங்களில் மனுக்கோரல்கள் 2014.07.08 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினம் விலைமனுக் கோரல்கள் பி. ப. 2.05 மணிக்கு திறக்கப்படும். மனுக்கோரல் விண்ணப்பப்படிவங்களையும், குறித்த விபரங்களையும் உரிய மாகாண நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திலும் மற்றும் மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலும் மீளப்பெறமுடியாத கொடுப்பனவாக 250 ரூபாவை (இருநூற்றைம்பது ரூபா) செலுத்தி 2014.07.07 ஆந் திகதியன்று ந. ப. 12.00 மணி வரை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.*

**அட்டவணை**

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச நில அளவை அலுவலகம் | விண்ணப்பப்படிவங்களும் ஏனைய விபரங்களும் கிடைக்கும் நிலையங்கள் | கேள்விமனு ஒப்படைத்தல் | அருகில் உள்ள நகரம் | கட்டிடம் தேவைப்படும் திகதி |
|---|---|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | கொழும்பு | ஹோமாகம-II பிம்சவிய | மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நில அளவை அலுவலகம், கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயக அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 5 | ஹோமாகம அல்லது சுற்றுப் புறத்தில் | 2014.07.16 |
| மேல் மாகாணம் | கொழும்பு | கெஸ்பேவ-I | மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நில அளவை அலுவலகம், கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயக அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 5 | பிலியந்தலை அல்லது சுற்றுப் புறத்தில் | 2014.07.16 |
| மேல் மாகாணம் | கொழும்பு | தெஹிவளை | மாகாண நிலஅளவையாளர் நாயகம் அலுவலகம் (மேல் மாகாணம்), மாவட்ட நில அளவை அலுவலகம், கொழும்பு | மாகாண நில அளவையாளர் நாயகம் (மேல் மாகாணம்), நிலஅளவையாளர் நாயக அலுவலகம், கிருல வீதி, கொழும்பு 5 | தெஹிவளை அல்லது சுற்றுப் புறத்தில் | 2014.07.16 |

*முத்திரையிடப்பட்ட தபாலுறையில் தேவையான சகல விபரங்களுடனான மனுக்கோரல்கள் அது அடங்கிய தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச நிலஅளவை அலுவலகங்களை வாடகைக்கு பெறுதல் (இடத்தின் பெயர்)" எனக் குறிப்பிட்டு 2014.07.08 ஆந் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட மாகாண நிலஅளவையாளர் நாயகத்தின் அலுவலகத்திற்கு பதிவுத்தபாலில் அனுப்பிவைக்கவோ அல்லது நேரடியாக கையளிக்கவோ வேண்டும்.*

*நில அளவையாளர் நாயகம்.*

*நில அளவையாளர் நாயகம் அலுவலகம்,
கிருல வீதி,
கொழும்பு 5,
2014, யூன் 6.*

*6-618*

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலங்கையில் பிலியந்தல, சித்தமுல்ல, சங்காராம, இல. 20/3 இலும், சுவிற்சர்லாந்தில் சீ. எச். 8132/ஏக்/இசட், எச்2ஏ, சிவிசென் இன்தென்னிலும் தற்போது பாணந்துறை, குணாநந்த மாவத்தையில் உள்ள 32/3 இல் வசிக்கும் சமில சாந்தனீ சமரவிக்கிரம (அடையாள அட்டை இல. 696302804V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு எச். டீ. ஜீ. கே. பண்டாரவினால் 2011, மே மாதம் 28 ஆந் திகதியிட்ட இல. 378 ஐக் கொண்ட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை வழங்கப் பட்ட இலங்கையின் பதிவாளர் நாயக அலுவலகத்தில் உள்ள அற்றோணி தத்துவப் புத்தகமான 52 ஆம் புத்தகத்தில் 35 ஆம் பக்கம், 2011.06.02 ஆந் திகதிய 4989 ஆம் இலக்கத்தில் பதிவான விசேட அற்றோணி தத்துவப்பத்திரத்தை இரத்துச்செய்து செல்லுபடியற்றதாக்கி யுள்ளேன் எனவும், இதன்பின் இந்த அற்றோணி தத்துவ பத்திரத்துக்கு எதுவித அதிகாரமும் இல்லையெனவும் இப்பத்திரம் காலாவதியாகி யுள்ளது எனவும் இதன் மூலமாக சகலருக்கும் தெரியப்படுத்துகிறேன்.

சமிலா சாந்தனீ சமரவிக்கிரம.

6-592

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச்செய்தல்

தெஹிவளை, களுபோவில, அன்டர்சன் வீதி, இலக்கம் 11/115 இல் வசிக்கும் மெரிஞ்ஞகே ஹேம நிமல் த கொஸ்தா (தே. அ. அ. 542931698V) ஆகிய என்னால் அற்றோணி அதிகாரம் வழங்கிய இருவருமான போர்ட் 721 இலக்கம் 188 பிஸ் அவெனியூ டீ லாரிபப்லிகன் 92000 - நான் கெயார், பிரான்ஸ் எனும் விலாசம் கொண்ட டிஸாரி கிரிஸ்டின் கெரன் டிகொஸ்தா (திருமணத்துக்கு முன்னர் டிஸாரி கிரிஸ்டின் கெரன்) மற்றும் மெரிஞ்ஞகே நீல் ரொமேஷ் த கொஸ்தா இலக்கம் 39, எலிவன்டயக் 93600 ஒல்னே சுவஸ் பொயில்ஸ் டேமியன் மெக்ஸ்வல் ஸேபியன் மற்றும் மெரிஞ்ஞகே ரஸிகா திலினி சேபியன் என்போர்களை அற்றோணி அதிபதிகளாக பிரான்ஸ், இலக்கம் 39, நியூவேன்டயக் 93600 ஒல்னே எஸ். எஸ். போயிஸ் இல் ஒப்பமிடப்பட்ட வரிசையாக இலங்கை பதிவாளர் நாயகம் அலுவல கத்தின் தினக்குறிப்பு பக்கம் 103 பக்கம் 104 8612 ஆம் தொகுதியில் மற்றும் தினக்குறிப்பு இலக்கம் 103 பக்கம் 8611 ஆம் தொகுதியில் பதிவுசெய்யப் பட்ட அதிகாரத்தின் மூலம் குறிப்பிட்ட இலக்குகளை முடிக்கப்படாததால் இத்துடன் இரத்துச்செய்வதாகவும் மேற்படி அற்றோணி அதிகாரத்தின் மூலம் மேலும் இயங்குவதை இத்துடன் இரத்துச் செய்வதாகவும் இத்தால் உலகினருக்கு அறியத்தருகிறேன்.

மெரிஞ்ஞகே ஹேம நிமல் த கொஸ்தா.

6-591

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச்செய்தல்

குருநாகல் மாவட்டத்தில் குளியாப்பிட்டிய தபால் பிரிவில் பண்டுவ மாவத்தையைச் சோந்த தற்போது தோஹா கட்டார் ஷானிவாவில் வசிக்கும் அபேகொட கீகியனகே தொன் காமினி பதிரன (தேசிய அடையாள அட்டை இலக்கம் 670910202V) ஆகிய என்னால் நாரம்மல தபால், குளியாப்பிட்டிய வீதி, இலக்கம் 345 இல் வதியும் அபேகொட கீகியனகே தொன் புஷ்பகுமார பதிரன (தேசிய அடையாள அட்டை இலக்கம் 690383900V) என்பவருக்கு பிரசித்திபெற்ற நொத்தாரிசு எரங்கா பின்னதூவவினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு என்னால் வழங்கப்பட்ட 2010.09.23 ஆந் திகதிய 02 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணிப் பத்திரத்தை இத்தால் இரத்துச்செய்து வலுவற்றதாக்கி இல்லாதொழிப்பதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகிறேன்.

ஏ. ஜீ. டி. காமினி பதிரன.

6-570

---

## அற்றோணி அதிகாரத்தை இரத்துச்செய்தல்

இலக்கம் 108, துருவியன, புலுகொல்ல, பொத்துஹெர எனுமிடத்தில் வசிக்கும் ரத்நாயக்க முதியன்செலாகே ரன்ஜித் பத்மசிறி ஆகிய என்னால், குருணாகல் பிரசித்திபெற்ற நொத்தாரிசு ஏ. எம். ஜயதிலக்க என்பவரால் கையொப்பமிட்டு உறுதிப்படுத்தப்பட்ட 2006.06.30 ஆந் திகதி பதியப்பட்ட 2006.06.30 ஆந் திகதிய 349 ஆம் இலக்கம் கொண்ட அற்றோணி அதிகாரப்பத்திரம் பொத்துஹெர, புலகொல்ல, துருவியன, இலக்கம் 108 இல் வசிக்கும் ரத்நாயக்க முதியன்செலாகே நிமலசிறி என்பவருக்கு வழங்கப்பட்டது. மேற்படி அற்றோணி அதிகாரப்பத்தி ரத்தை இரத்துச்செய்வதாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருவதோடு ரத்நாயக்க முதியன்சேலாகே நிமலசிரி என்பவர் எனக்காகச் செய்கின்ற எவ்வித நடவடிக்கைகளுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் இதன்பின் நான் பொறுப்புதாரியல்ல என்றும் அறியத்தருகிறேன்.

ஆர். எம். ஆர். பத்மசிறி.

6-562

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : புரோ-தெரபியூடிக்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவு இலக்கம் : பீவீ 90039
கூட்டிணைப்புத் திகதி : 19.12.2012
பதிவு முகவரி : இல. 112, 1/2, ஜூபிலி போஸ்ட், மிரிஹான, நுகேகொடை

விஜயசிரி மஹாவிதானலாகே பியசிறி பெரேரா,
பணிப்பாளர்.

6-654

**2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334(1) ஆம் பிரிவிற்கு அமைவாக கடன் கொடுத்தோர் கூட்ட அறிவித்தல்**

தப்றோபான இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட் - பீவீ 2714

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 334, 335, 336 ஆம் பிரிவிற்கமைவாக மேற்குறிப்பிடப்பட்ட கம்பனிக்கு கடன் கொடுத்தோருக்கான கூட்டம் ஒன்று எதிர்வரும் 2014, ஆனி மாதம் 30 ஆந் திகதி பி. ப. 4.30 மணிக்கு இல. 311, ரீ. பி. ஜயா மாவத்தை, (டார்லி வீதி), கொழும்பு 10 இல் அமைந்துள்ள கம்பனியின் பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தில் நடைபெறுமென இத்தால் அறிவித்தல் கொடுக்கப்படுகிறது. (கூட்டத்தில் பங்குபற்றுவதற்கான அதிகாரப் பத்திரத்தினை இக்கம்பனிக்கு கடன் கொடுத்தோர் கூட்டம் நடைபெறுவதற்கு 48 மணித்தியாலத்திற்கு முன்னதாக இல. 311, ரீ. பி. ஜயா மாவத்தை (டார்லி வீதி), கொழும்பு 10 இல் அமைந்துள்ள மேற்படி கம்பனியின் அலுவலகத்தில் தாக்கல் செய்ய வேண்டும்.)

கடன் கொடுத்தவர்கள் கூட்டத்தில் வாக்களிக்க விரும்பின் தமது கடன் விபரங்களை முன்கூட்டியே மேற்படி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். மேலும் முன்னிலைப்படுத்தப்பட்ட கடன் கொடுத்தோர் (தமது பொறுப்பு பத்திரத்தைச் சமர்ப்பிக்காதவிடத்து) தமது கடன் விபரங்களை அது கொடுத்த தொகை, திகதி மற்றும் தற்போதைய நிலுவை என்பவற்றையும் மேற்கண்டவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

தற்றோபான இன்ரநஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்,
பணிப்பாளர்கள் சபை.

2014, ஆனி 05.

**குறிப்பு**.- தேவை ஏற்படின் இக்கூட்டத்தில் கடன் கொடுத்தோரால் மேற்படி கம்பனியின் ஒடுக்குதலுக்கான கலைப்பாளர் ஒருவரை நியமிக்கவும் பரிசோதகர் குழுவொன்றை நியமிக்கவும் முடியும்.

6-637

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : கடுகதிப் பாதை போக்குவரத்து கம்பனி (தனியார்) வரையறுக்கப்பட்டது
பதிவிலக்கம் : பீவீ 98435
கூட்டிணைக்கப்பட்ட திகதி : 06.05.2014
பதிவு முகவரி : 9 ஆவது மாடி, 'செத்சிரிபாய', கட்டம் I, பத்தரமுல்லை

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

6-634

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வருமாறு அறிவிக்கப்படுகின்றது :-

நிறுவனத்தின் பெயர் : ரொவிக் இன்டர்நஷனல் (தனியார்) நிறுவனம்
பதிவுசெய்யப்பட்ட இலக்கம் : பீவீ 98606
பதிவுசெய்யப்பட்ட திகதி : 20.05.2014
முகவரி : இல. 23/5/1, நாகஹமுல்ல வீதி, கொலொன்னாவ

கம்பனிச் செயலாளர்.

6-631

---

**அறிவித்தல்**

நியூ லைப் றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1) (ஆ) ஆம் பிரிவின்கீழ் கம்பனி ஒடுக்குதலுக்கான முடிவெடுக்கும் விசேட தீர்மானமொன்று நியூ லைப் றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் பங்குதாரர்களால் 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப் படுகிறது.

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2014, ஆனி 18.

6-517/1

---

**கலைப்பலுவலர் நியமனத்திற்கான அறிவித்தல்**

நியூ லைப் றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்-பீவீ 78865

கொழும்பு 3, காலி வீதி, இல. 142, யதம கட்டிடம், 3 ஆம் மாடியில் உள்ள திருவாளர்கள் நாணயக்கார மற்றும் கம்பனியின் திரு. ஜீ. கே. சுதத் குமார் ஆகிய நான், 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆந் திகதியன்று கம்பனியின் பங்குதாரர்களினால் நிறைவேற்றப்பட்ட சாதாரண தீர்மானத்தின் மூலம் நியூ லைப் றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்டின் கலைப்பலுவலராக நியமிக்கப்பட்டுள்ளேன் என இத்தால் அறியத்தருகிறேன்.

திரு. ஜீ. கே. சுதத் குமார்,
கலைப்பலுவலர்,
நியூ லைப் றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

2014, ஆனி 18.

6-517/2

### கலைப்பலுவலர் நியமனத்திற்கான அறிவித்தல்

ஏ. ஜீ. எஸ். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்–பீவீ 64952

கொழும்பு 3, காலி வீதி, இல. 142, யதம கட்டிடம், 3 ஆம் மாடியில் உள்ள திருவாளர்கள் நாணயக்கார மற்றும் கம்பனியின் திரு. ஜீ. கே. சுதத் குமார் ஆகிய நான், 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆந் திகதியன்று கம்பனியின் பங்குதாரர்களினால் நிறைவேற்றப்பட்ட சாதாரண தீர்மானத்தின் மூலம் ஏ. ஜீ. எஸ். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டின் கலைப்பலுவலராக நியமிக்கப்பட்டுள்ளேன் என இத்தால் அறியத்தருகிறேன்.

திரு. ஜீ. கே. சுதத் குமார்,
கலைப்பலுவலர்,
நியூ லைப் றிசோட்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

2014, ஆனி 18.

6-518/1

---

### அறிவித்தல்

ஏ. ஜீ. எஸ். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 319(1) (ஆ) ஆம் பிரிவின்கீழ் கம்பனி ஒடுக்குதலுக்கான முடிவெடுக்கும் விசேட தீர்மானமொன்று ஏ. ஜீ. எஸ். லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்டின் பங்குதாரர்களால் 2014 ஆம் ஆண்டு ஆனி மாதம் 18 ஆந் திகதி நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

2014, ஆனி 18.

6-518/2

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2014, வைகாசி 27 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : கென்சர் கெயார் வெல்பெயார் பவுண்டேஷன்
கம்பனியின் இலக்கம் : ஜீஏ 2931
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 165, நல்லவத்தை றோட், மஹரகம

நிறுவனத்தின் முகாமையாளர்,

எச். டீ. சீ. டி. விஜேசிங்க,
சட்டத்தரணி, நொத்தாரிசு,
கம்பனிச் செயலாளர்கள்.

6-543

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் குறிப்பிட்டுள்ள பொறுப்பு வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் 2014, வைகாசி 19 ஆந் திகதி கூட்டிணைக்கப்பட்டுள்ளது என்பதை இவ்வறிவித்தல் மூலம் அறியத்தருகின்றோம் :-

கம்பனியின் பெயர் : நசல எக்ரிகல்சர் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் இலக்கம் : பீவீ 98624
பதிவுசெய்யப்பட்டுள்ள முகவரி : இல. 45, அல்பிரட் ஹவுஸ் கார்டன்ஸ், கொழும்பு 3

நிறுவனத்தின் முகாமையாளர்,

கோ-சேர்வ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-544

---

### அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி அதன் பெயரை மாற்றியுள்ளதென அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் முதல் பெயர் : ட்ரேட்கார்ட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
பதிவிலக்கம் : பீவீ 66058
கூட்டிணைப்புத் திகதி : 29.04.2014
பதிவு முகவரி : 10 ஆம் மாடி, ஜட்கன் ஸ்பென்ஸர் கோபுரம் 11, இல. 315, வொக்ஷோல் வீதி, கொழும்பு 2
கம்பனியின் புதிய பெயர் : ஜீ ரீ நெக்ஸஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கோர்ப்பரேட் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்.

ஜீ ரீ நெக்ஸஸ் சேர்விசெஸ் (பிறைவேட்) லிமிட்டெட்.

6-466

---

### பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி பின்வருமாறு கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

கம்பனியின் பெயர் : ஈ 3 எக்ஸ் கிரியேடிவ்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
கம்பனியின் பதிவிலக்கம் : பீவீ 82788
கூட்டிணைப்புத் திகதி : 2011, நவெம்பர் 29

*பதிவு முகவரி* : இல. 58/1/1, பெப்பிலியான வீதி, நெதிமால, தெஹிவளை

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/3, வொக்ஷோல் வீதி,
கொழும்பு 02.

6-594/2

---

**அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனிகள் கூட்டிணைக்கப்பட்டுள்ளன :-

| கம்பனியின் பெயர் | கம்பனியின் இலக்கம் | பதிவு அலுவலகம் | பதிவுசெய்யப் பட்ட திகதி |
|---|---|---|---|
| மிஸ்டர் ரீ-டெலென்ட் ட்ரஸ்ட் டீம் வேர்க் (பீவீரீ) எல்ரீடி | பீவீ 98215 | இல. 327/6, ஜனதா மாவத்தை, வேரஹெர, பொரலெஸ் கமுவ | 2014.04.22 |

மேற்குறிப்பிட்ட கம்பனிக்காக,

தஸ்னீம் அடம்ஜி,
மிஸ்டர் ரீ-டெலென்ட் ட்ரஸ்ட் டீம் வேர்க்
(பீவீரீ) எல்ரீடி.

இல. 327/6, ஜனதா மாவத்தை,
வேரஹெர,
பொரலெஸ்கமுவ.

6-636

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : வேர்சூவல் பிளேனட் சொலுஷன்ஸ் லங்கா (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 72776
*கூட்டிணைப்புத் திகதி* : 12.07.2010
*பதிவு முகவரி* : இல. 01, ஆனந்த சாஸ்திராலய வீதி, பிட்டகோட்டே, கோட்டே

*கம்பனியின் பெயர்* : பிநோ லக் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனியின் பதிவு இலக்கம்* : பீவீ 88780
*கூட்டிணைப்புத் திகதி* : 11.10.2010
*பதிவு முகவரி* : இல. 106டி, பஹல பொமரிய, கடுவெல

கம்பனிச் செயலாளர்கள்.

6-555

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9 ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனியானது 2014 ஆம் ஆண்டின் மே மாதம் 22 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது :-

*கம்பனியின் பெயர்* : சேம் ஸ்ரக்சரல் ஸ்டீல் என்ஜினியர்ஸ் அன்ட் டிசைனர்ஸ் (பீவீரீ) எல்ரீடி
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 98696
*பதிவு முகவரி* : இல. 14 3/1பீ, 37 ஆவது ஒழுங்கை, கொழும்பு 6

டீஸ் மெனேஜ்மென்ட் கன்சல்டன்ட்ஸ்
மற்றும் செக்ரட்டேரியல் சேர்விசெஸ்
(பிறைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

6-590

---

**பொது அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

*கம்பனியின் பெயர்* : குளோபல் பைபர் எக்ஸ்போட்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்
*கம்பனி பதிவிலக்கம்* : பீவீ 98603
*கூட்டிணைப்புத் திகதி* : 2014, மே 16
*பதிவு முகவரி* : என். டி. எச். அப்துல் கபூர் பில்டிங், இல. 40, சேர்ச் வீதி, கொழும்பு 11

சார்ட் பிசினெஸ் சிஸ்ரெம்ஸ் (பிறைவேட்)
லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

இல. 141/பி. வொக்சோல் வீதி,
கொழும்பு 2.

6-594/1

### அறிவித்தல்

*2014.05.23 ஆந் திகதி கீழே குறிப்பிட்டுள்ள கம்பனி கூட்டிணைக்கப்பட்டதென 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ் பின்வருமாறு அறிவிக்கப் படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : எகோ அக்ரோ ஓர்கனிக் (பிறைவேட்) லிமிட்டட்
*பதிவிலக்கம்* : பீவீ 98627
*பதிவு முகவரி* : இல. 32, கண்டி வீதி, கலகெடிஹேன

கம்பனிச் செயலாளர்.

6-557

### அறிவித்தல்

*2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின்கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*கம்பனியின் பெயர்* : நியூ மோர்ஜ் இன்டர்நஷனல் (பிறைவேட்) லிமிட்டெட்
*பதிவு இலக்கம்* : பீவீ 92837
*பதிவு முகவரி* : இல. 36, டீ. எஸ். விஜேசிங்க மாவத்தை, கட்டுபெத்த, மொரட்டுவை
*கூட்டிணைப்புத் திகதி* : 2013.06.03

6-574

## ஏல விற்பனைகள்

### செலான் வங்கி பீஎல்சீ - யாழ்ப்பாணம் கிளை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் விற்பனை*

*''கடன்பட்டோர்'' என்ற வகையில் சாவகச்சேரியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை புலேந்திரன், செல்வி புலேந்திரன் நிர்மலராணி மற்றும் புலேந்திரன் கோகுலராஜன் என்பவர்களுக்கு வழங்கப்பட்ட சலுகைகளுக்காக செலான் வங்கி பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட சொத்து.*

#### ஏலவிற்பனை

வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், தென்மராட்சி பிரிவிலான சாவகச்சேரி சமயகுருவின் வட்டாரம் மீசாலையில் அமைந்துள்ள ''பன்றிமுடவன்புலம், பன்றிமுடவன்புலம் வளவும் கருவேப்பன் வளவும்'' என்று அழைக்கப்படுகின்ற காணித்துண்டு 5 1/2 எல்எம்எஸ் வீ. சீ. (உறுதிப்பத்திர இல. 22081), 12 எல்எம்எஸ். வீ. சீ. மற்றும் 12 கேஎல்எஸ் (உறுதிப்பத்திர இல. 4062), 8 1/2 எல்எம்எஸ் வீ. சீ. (உறுதிப்பத்திர இல. 4063) மற்றும் 87 எல்எம்எஸ். வீ. சீ. (உறுதிப்பத்திர இல. 7665) என முழுவதுமாக 113எல்எம்எஸ். வீ. சீ. மற்றும் 13 கேஎல்எஸ் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் மற்றும் சமப்படுத்துனர் கே. பஞ்சாட்சரம் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2011.06.04 ஆந் திகதியிடப்பட்ட நிலவரைபட இல. 1531 இல் துண்டு 1, 106 எல்எம்எஸ் வீ. சீ. மற்றும் 16.9 கேஎல்எஸ் அங்கு காணப்படுகின்ற கிணறு உட்பட விஸ்தீரணத்தைக் கொண்டுள்ளது.

மேலே விவரிக்கப்பட்டுள்ள காணியை நான் 2014, யூலை 11 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் பகிரங்க ஏலத்தின் மூலம் விற்பனை செய்யவுள்ளேன்.

**காணியைச் சென்றடைகின்ற விதம்.**- சாவகச்சேரி நகரத்திலிருந்து பருத்தித்துறை வீதி மார்க்கமாக 3 கி. மீ. தூரத்தில் குறிக்கப்பட்ட சொத்து அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- தயவுசெய்து 2014.03.07 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2014.02.24 ஆந் திகதிய ''டெயிலி மிரர்'', ''லங்காதீப'' பத்திரிகைகளையும் 2014.02.19 ஆந் திகதிய ''தினக்குரல்'' பத்திரிகையையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு செய்யும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வனவுதாரர் ஏலவிற்பனை முடிவில் கீழ்க்காணும் தொகைகளைக் காசாகச் செலுத்தல் வேண்டும்.

(1) கொள்வனவு விலையின் பத்து வீதம் (10%) ; (2) உள்ளூர் அதிகார சபைக்கான உள்ளூர் விற்பனை வரி அத்துடன் உள்ளூர் அதிகார சபைக்கு உள்ளூர் விற்பனை வரி (1%) (ஒரு வீதத்திற்குப் பதிலாக) அரசினால் அல்லது உள்ளூர் அதிகார சபையினால் விதிக்கப்பட்ட வேறு ஏனைய வரி ; (3) ஏலவிற்பனையாளர் கட்டணமாக இரண்டரை வீதம் (2 1/2 %) ; (4) விற்பனை நிபந்தனைகளுக்கான நொத்தாரிசு உறுதிப்படுத்தல் கட்டணம் 2,000 ரூபா, (5) இலிகிதர் மற்றும் கூவுவோர் வேதனங்கள் 500 ரூபா.

விற்பனையின் பேரில் செலவிடப்பட்ட மொத்த விளம்பரச் செலவு மற்றும் கொள்வனவு விலையின் மிகுதி 90% விற்பனை திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீஎல்சீயில் வைப்புச் செய்தல் வேண்டும்.

மேற்கூறப்பட்ட நிபந்தனைகளுக்கேற்ப மிகுதித் தொகை 30 நாட்களுக்குள் வைப்புச் செய்யப்படாவிடில் முன்வைப்புச் செய்த தொகையில் 10% கழிவு தள்ளுபடி செய்து மீள் விற்பனை செய்ய வங்கிக்கு முழு உரித்துடையது.

காணி உறுதி ஏனைய சம்பந்தப்பட்ட ஆவணங்களை, ''பிரத்தியேக முகாமையாளர் (சட்டம்), செலான் வங்கி பீஎல்சீ, செலிங்கோ செலான் டவர், இல.90, காலி வீதி, கொழும்பு 03'' என்ற விலாசத்தில் பெற்றுக்கொள்ளவும் பார்வையிடவும் முடியும். தொ.பே. 2456474, 2456485.

துசித கருணாரத்ன (ச.நீ),
உத்தரவுபெற்ற ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

ரீ அன்ட் எச் ஒக்சன்,
இல.50/3, விஹார மாவத்தை,
கொலன்னாவ.
தொலைபேசி இல. : 0113068185, 2572940.

6-572

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 74034903

சிலாபம், வீவர்ஸ் றோட், இல. 12 ஐச் சேர்ந்த திரு. சத்குமார முதியன்சேலாகே நிஹால் மற்றும் திருமதி எகோடகமகே ஞான பிரேமரத்ன ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.05.09 ஆந் திகதிய 1862 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2014.04.25 ஆந் திகதிய ''தினமின'', ''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'', ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 05 என்னும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம நிறுவனத்தின் ஏலதாரர் 2014.07.09 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### அட்டவணை

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், சிலாபம் பதிவுப்பிரிவில், பிட்டிகல் கோரளை வடக்கு ஆனவிழுந்தான் பற்றுவில் சிலாபம் நகரம் பட்டின சபை எல்லைகளுள் வீவர்ஸ் வீதியில் அமைந்த வரிமதிப் பிலக்கம் 14 (1844) ஐக் கொண்ட "குளத்தடி தோட்டம்" என அழைக்கப் படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.G. S. B. பராக்ரம தயாரித்த 1992.04.20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 837B இல் விபரித்த துண்டு 1 B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு - வடக்கு: மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 1 A யும் ; கிழக்கு : 3 அடி அகல வழிப்பாதையும் துண்டு 2 இன் மீதிப்பாகமும்; தெற்கு : வீவர்ஸ் வீதியும் ; மேற்கு : முனசிங்ஹவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு இருபது பேர்ச்சுக்கள் (0ஏ.0றூ.20 பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் மற்றும் மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் அடையாளமிட்ட 3 அடி அகல வழிப்பாதை மீதான உரிமையும் ஆகும். இது சிலாபம் காணிப்பதிவகத்தில் D 138/106 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் பதிவுப்பிரிவில் பிட்டிகல் கோரளை வடக்கு ஆனவிழுந்தான் பற்றுவில் சிலாபம் பட்டின சபை எல்லைகளுள், வீவர்ஸ் றோட்டில் அமைந்த வரிமதிப்பிலக்கம் 14 (1844) ஐக் கொண்ட குளத்தடி தோட்டத்தின் துண்டு 1 A என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு உத்தரவு பெற்ற நில அளவையாளர் A.G.S.B. பராக்ரம தயாரித்த 1992.04.20 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 837 B இல் விபரித்த காணித்துண்டு வடக்கு : மெனுவலின் காணியும்; கிழக்கு : துண்டு 2 உம்; தெற்கு : துண்டு 1 B யும் ; மேற்கு : முனசிங்ஹவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு எட்டு பேர்ச் (0ஏ.0றூ.8பே.) விஸ்தீரண முடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது சிலாபம் காணிப்பதிவகத்தில் D 116/54 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. உத்தரவு பெற்ற நில அளவையாளர் M.M.P டன்ஸ்டன் பெரேரா தயாரித்த 2003.09.27 ஆம் திகதியிட்ட வரைபடம் இல. 4253 இல் துண்டு 1 என தற்போது விபரித்துள்ள மேற்குறிப்பிட்ட காணி- வடக்கு : மெனுவலின் காணியும் ; கிழக்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 837 A இல் துண்டு 2 A யும் 3 அடி அகல வழிப்பாதையும் ; தெற்கு : மேற்குறிப்பிட்ட வரைபடம் இல.837 B இல் 1 Bயும் ; மேற்கு : முனசிங்ஹவின் காணியும் எல்லைகளாகக் கொண்டு எட்டு பேர்ச் (0ஏ.0றூ.8பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி.

திருமதி P.T.D.A. பெரேரா,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
சிலாபம்,
2014.05.23.

6-580

---

### இலங்கை வங்கி

*1968 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறான இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் (397 ஆம் அத்தியாயம்) 22 ஆம் பிரிவினதும் அதன் திருத்தங்களினதும்கீழ் விற்பனை அறிவித்தல்*

கடன் தொடர்பு இல. 73511866

திரு. டீ. வீ. டீ. பிரியங்க மற்றும் திருமதி எல். வை. எச். குளுணுகுன ஆகியோர் ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை

இலங்கை வங்கி கட்டளைச் சட்டத்தின் 19 ஆம் பிரிவின்கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2014.04.04 ஆந் திகதிய 18576 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2014.03.24 ஆந் திகதிய '''டெய்லி நியூஸ்'', ''தினகரன்'', 'தினமின'' ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச் சட்டத்தின் பிரிவு 26 இன்கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவை என்னும் முகவரியைச் சேர்ந்த ரீ. அன்ட் எச். ஏலத்தின் ஏலதாரர் திரு. துசித்த கருணாரத்ன அவர்கள் 2014.07.05 ஆந் திகதி மு. ப. 11.00 மணிக்கு அதே இடத்தில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

#### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோரளை, பள்ளே பற்றுவில், நுக்மலே மேற்கு கிராம அலுவலர் பிரிவிலும் மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம பட்டின சபை எல்லைகளுள் நுக்மலேயில் அமைந்த ''கிரிபெலகஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சிறிசேன தயாரித்த 2009, திசெம்பர் 11 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1761 இல் விபரித்த துண்டு B என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த

காணித்துண்டு - வடக்கு : வரைபடம் இல. 1761 இல் துண்டு A உம் ; கிழக்கு : துண்டு 2 (10 அடி அகல பாதை) மற்றும் வரைபடம் இல. 1422 இல் துண்டு 5 உம் ; தெற்கு : எஸ். ஏ. டி. அலிஸ்னினா உரிமை கோரும் காணியும் ; மேற்கு : 8 அடி தொடக்கம் 12 அடி தற்போதைய ரோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1761 இன்படி பத்து தசம் எட்டு எட்டு பேர்ச் (0ஏ. 0றூ. 10.88பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள மரங்கள், கட்டிடங்கள் மற்றும் சகலதும் ஆகும். இது ஹோமாகம காணிப் பதிவகத்தில் C66/25 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது அட்டவணை**

மேற்குறிப்பிட்ட றுக்மலேயில் அமைந்த ''கிரிபெல்லகஹவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். ஏ. சிறிசேன தயாரித்த 2007, திசெம்பர் 13 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 1422 இல் விபரித்த துண்டு 2 (பாதைக்கு ஒதுக்கப்பட்டது) என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு- வடக்கு : வரைபடம் இல. PP 8763 இல் துண்டுகள் 9 மற்றும் 10 உம் ; கிழக்கு : துண்டுகள் 3, 4 (1 அடி கால்வாய்) மற்றும் வரைபடம் இல. 1422 இல் துண்டு 1 உம் ; தெற்கில் : வரைபடம் இல. 1422 இல் துண்டுகள் 5 மற்றும் 1 உம் ; மேற்கில் : வரைபடம் இல. 1422 இல் துண்டு 5 உம் 8 -12 அடி தற்போதைய ரோட்டும் எல்லைகளாகக் கொண்டு மேற்குறிப்பிட்ட வரைபடம் இல. 1422 இன்படி ஐந்து தசம் ஒன்பது ஏழு பேர்ச் (0ஏ. 0றூ. 5.97பே.) விஸ்தீரணமுடையது. இது ஹோமாகம காணிப்பதிவகத்தில் C66/26 இல் பதிவுசெய்யப் பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ரீ. என். எம். ஜயசிங்ஹ,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
அத்துருகிரிய.
2014, மே 22.

6-585

---

**கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ – நகரக் கிளை**

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ (பதிவு இலக்கம் பீகியூ 116) மூலம் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்-

**மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், ராகம பத்து, அலுத்குரு கோரலயில் தெற்கு வத்தளை பிரதேச சபை ஹெந்தல கிளை அலுவலக எல்லையில் கட்டிட இலக்கம் 25, திம்பிரிகஸ்யாய றோட், ஹெந்தலயில் அமைந்துள்ள "திம்பிரிகாவத்த" என்ற காணிக்கு நிலஅளவையாளர் எச். ஆர். சமரசிங்க 1998.02.19 ஆந் திகதியுடைய வரைபட இலக்கம் 2703 இல் காண்பிக்கப்பட்ட பகுதிபடுத்திய காணித்துண்டான லொட் 2, இக்காணியில் உள்ள கட்டிடங்கள் மற்றும் எல்லாம் சேர்த்து**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 7.50பே.)**

**மற்றும் திம்பிரிகஸ்யாய றோட்டில் (பாதைக்கு ஒதுக்கப்பட்ட காணி) காணியான திம்பிரிகாவத்த**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 6.50பே.)**

(கடன் எடுத்த கொழும்பு 7, றொஸ்மிட் பிளேஸ், ஆர்காடியா கார்டின்ஸ், கட்டிட இலக்கம் 11/6ஏ என்ற பதிவு விலாசத்தில் அமைந்துள்ள இலங்கை கம்பனி சட்டப்படி அமைக்கப்பட்ட ஏ. எம். ஜே. கார்கோ (பிறைவேட்) லிமிட்டெட் மற்றும் காணியை ஈடுவைத்த புலுக்குட்டி ஆராச்சிகே தொன் பெனில்டன் திராஜ் மேற்படி காணியை கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ இற்கு ஈடுவைத்துள்ளார்கள்)

மேற்சொல்லப்பட்ட காணியை என்னால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் 2014, யூலை மாதம் 14 ஆந் திகதி மு. ப. 11.30 மணிக்கு விற்பனை செய்யப்படும்.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.**- 2014.03.28 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், ''லக்பிம'', ''த ஐலண்ட்'' மற்றும் ''வீரகேசரி'' பத்திரிகைகளையும் ஏலவிற்பனை விளம்பரத் திற்காக 2014.06.20 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014.06.23 ஆந் திகதிய "லக்பிம", "த ஐலண்ட்" மற்றும் "வீரகேசரி" பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**காணியைச் சென்றடையும் பாதை.**- கொழும்பு நகரத்தில் இருந்து நீர்கொழும்பு பிரதான றோட்டில் 8 கிலோ மீற்றர் தூரம் ஹெந்தல சந்திக்குச் சென்று இடதுபக்கம் திரும்பி ஹெலகந்த செல்லும் றோட்டில் 1 3/4 கிலோ மீற்றர் தூரம் வெலியமுன சந்தியில் இருந்து 100 மீற்றர் மேலும் சென்று திம்பிரிகஸ்யாய குறுக்கு றோட்டுக்குச் சென்று இடதுபக்கம் திரும்பி இந்த திம்பிரிகஸ்யாய குறுக்கு றோட்டில் 200 மீற்றர் மூன்று வளைவுகளையும் தாண்டி காணியை அடைய முடியும்.

**கொடுப்பனவு செலுத்தும் விதம்.**- வெற்றிபெற்ற கொள்வன வாளர் ஏலமுடிவில் பின்வரும் கட்டணங்களை காசாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு விலையின் 10% ;
(2) உள்ளூராட்சிமன்ற வரி 1% ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5 % ;
(4) நொத்தாரிசு கட்டணம் ரூபா 2,000 ;
(5) இலிகிதர் கட்டணம் ரூபா 500 ;
(6) ஏலத்திற்காக செலவுசெய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.

மிகுதி 90% ஏலத்திகதியில் இருந்து 30 நாட்களுக்குள் கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பிரதான அலுவலகம் அல்லது நகர கிளையில் செலுத்த வேண்டும்.

வேறு விபரங்களுக்காக.- ''முகாமையாளர் (அறவிடுதல்), கொமர்ஷல் பேங்க் ஒப் சிலோன் பீஎல்சீ, இல. 21, சேர். ராசிக் பரீட் மாவத்தை, கொழும்பு 1''. தொலைபேசி இல. : 011-2486770 ; தொலைநகல் இல. : 011-2347717.

எல். பி. சேனாநாயக்க (சமாதான நீதவான்),
மூத்த உத்தரவுபெற்ற ஏலதாரர், விலைமதிப்பீட்டாளர்,
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 182, 3 ஆவது மாடி, புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி/பக்ஸ் 011- 2445393.

6-623

### மக்கள் வங்கி - மஹவெவ கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஞ ஆம் பிரிவின் கீழான விற்பனை*

பெறுமதிமிக்க சொத்து ஏல விற்பனை

1. **வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், மாறவில காணிப் பதிவக எல்லைகளுக்கு உட்பட்ட, தெற்கு பிட்டிகல் கோரளே, யட்டகலன் பற்று, பஹல மஹவெவ கிராமத்தில் அமைந்துள்ள 'கஜுகஹவத்த' என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ரஞ்ஜித் யாப்பா அவர்களால் வரையப்பட்ட 1996 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 5091 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டது மான காணித்துண்டு- அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மாறவில காணிப்பதிவகத்தில் கே99/230 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 22.05பே.; 0.0569 ஹெக்டெயர்)**

2. **மேலே கூறப்பட்ட பஹல மஹவெவ கிராமத்தில் அமைந்துள்ள 'கஜுகஹவத்த' என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ரஞ்ஜித் யாப்பா அவர்களால் வரையப்பட்ட 1996 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 5091 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டது மான காணித்துண்டு- அதிலுள்ள மரங்கள், தோட்டங்கள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தும் அடங்கலாக மாறவில காணிப்பதிவகத்தில் கே99/231 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 22.05பே.; 0.0569 ஹெக்டெயர்)**

3. **மேலே கூறப்பட்ட பஹல மஹவெவ கிராமத்தில் அமைந்துள்ள 'கஜுகஹவத்த' என அழைக்கப்படும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் வை. எம். ரஞ்ஜித் யாப்பா அவர்களால் வரையப்பட்ட 1996 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதிய 5091 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிப்பிடப்பட்டுள்ள பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டது மான காணித்துண்டின் ஊடாகச் செல்லும் வீதியைப் பயன்படுத்துவதற்கான உரிமையுடன் மாறவில காணிப்பதிவ கத்தில் கே99/232 ஆம் இலக்கத்தின்கீழ் பதிவுசெய்யப் பட்டுள்ளது.**

**(காணியின் விஸ்தீரணம் : 0ஏ. 0றூ. 04.2பே.; 0.0106 ஹெக்டெயர்)**

***ஆதனத்தைச் சென்றடையும் வழி.***- கொழும்பு-சிலாபம் பிரதான வீதியின் மஹவெவ சந்தியிலுள்ள மணிக்கூட்டுக் கோபுரத்திற்கு அருகாமையில் வலது பக்கமாகவுள்ள தொடுவாவ வீதியில் சுமார் 300 மீற்றர் வரை சென்றதும் குறிப்பிட்ட காணி அதே வீதியின் இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

மக்கள் வங்கியினால் எமக்களிக்கப்பட்ட அதிகாரத்தின்படி 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 08 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை மு. ப. 11.00 மணிக்கு எம்மால் அதே இடத்தில் பகிரங்க ஏலவிற்பனைக்கு விடப்படும்.

***தீர்மான அறிவித்தலுக்கு.***- தீர்மான அறிவித்தலுக்கு தயவுசெய்து 2014, சனவரி மாதம் 17 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும், 2014, சனவரி 24 ஆந் திகதிய "தினமின", "டெயிலி நியூஸ்" மற்றும் "தினகரன்" ஆகிய செய்திப் பத்திரிகைகளையும் பார்வையிடவும்.

**கொடுப்பனவு செய்யும் முறை.**- ஏலவிற்பனையில் வெற்றிபெற்ற கொள்வனவாளர், விற்பனையின் முடிவில் பின்வரும் தொகைகளை காசாக முழுமையாகச் செலுத்த வேண்டும் :-

(1) கொள்வனவு செய்யப்பட்ட விலையின் 10% (பத்து சதவீதம்) ;
(2) உள்ளூர் அதிகார சபைக்குச் செலுத்தப்படவேண்டிய விற்பனை வரி, விற்பனை விலையில் 1% (ஒரு சதவீதம்) ;
(3) விற்பனை விலையில் ஏலதாரர் தரகு 2.5% (இரண்டரை சதவீதம்);
(4) எழுதுவினைஞர் மற்றும் ஏலம் கூறுவோர் கட்டணம் 500 ரூபா ;
(5) விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய கட்டணங்கள் இருப்பின் அவையும் ;
(6) விற்பனைச் சான்றிதழுக்கான முத்திரை வரி.

கொள்முதல் விலையின் மீதி 90% (தொண்ணூறு சதவீதம்) விற்பனையின் பின்னர் 30 நாட்களுக்குள் இல. 79, மாறவில வீதி, நாத்தாண்டியவிலுள்ள மக்கள் வங்கிக் கட்டிடத்தின் முதலாம் மாடியில் இருக்கும் மக்கள் வங்கி, பிரதேச தலைமை அலுவலகத்தின் பிரதேச முகாமையாளரிடம் செலுத்தப்பட வேண்டும். தொலைபேசி இல. : 032-2253300, 032-2253301 ; தொலைநகல் இல. : 032-2255247.

மேற்கூறப்பட்ட தொகை குறிப்பிடப்பட்டவாறு 30 நாட்களுக்குள் செலுத்தப்படாவிட்டால், ஏற்கனவே செலுத்தப்பட்ட கொள்வனவு விலையின் 10% சதவீதத்தைப் பறிமுதல் செய்வதற்கும், உடைமையை மீள விற்பனை செய்வதற்குமான உரிமை வங்கிக்கு உண்டு.

காணி உறுதியின் பிரதிகளையும், ஏனைய விபரங்களையும் மேற்கூறப்பட்ட விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

முன்னறிவித்தலின்றி ஏலவிற்பனையை நிறுத்தும்/இரத்துச் செய்யும் அதிகாரம் வங்கிக்குள்ளது.

சொக்மன் அன்ட் சமரவிக்ரம,
ஒரே நாடு, ஒரே ஏலவிற்பனையாளர்,
122 வருடகால மகோன்னத சேவை.

| தலைமை அலுவலகம் : | நகர அலுவலகமும் காட்சியறையும் : |
|---|---|
| 24, டொரிங்டன் வீதி, கண்டி. | 290, ஹவ்லொக் றோட், கொழும்பு 5. |
| தொலைபேசி : 081-2227593 | தொலைபேசி : 011-2502680, 011-2585408 |
| தொ.பே./ஃபக்ஸ் : 081-2224371 | தொ.பே./ஃபக்ஸ் : 011-2588176 |
| மின்னஞ்சல் : schokmankandy@sltnet.lk | மின்னஞ்சல் : schokman@samera1892.com |

இணையத்தளம் : www.sandslanka.com

6-577